# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்

**தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்த அனைத்துக் கலைஞர்களினதும் நினைவாக**

**11 ஆவது முறையாக நடாத்தும்**




**தமிழீழ எழுச்சிப்பாடற் போட்டி**

## விதிமுறை

**போட்டியை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாண்டுமுதல் புதிய விதிமுறைகள் இணைக்கப்பட்டுள்ளன.**

- **2026ஆம் ஆண்டுக்கான எழுச்சிக்குயில் போட்டி ஐரோப்பிய ரீதியில் நடைபெறவுள்ளது.**
- **காந்தள் எழுச்சிக்குயில், செண்பகம் எழுச்சிக்குயில், வாகை எழுச்சிக்குயில், சிறுத்தை எழுச்சிக்குயில், வளர்ந்தோர் எழுச்சிக்குயில்** என ஐந்து பிரிவுகளாகப் போட்டி நடைபெறும்.
- எழுச்சிக்குயில் விருதுக்கான போட்டி இரண்டு சுற்றுகளாக நடைபெறும்.
- **வாகை எழுச்சிக்குயில், சிறுத்தை எழுச்சிக்குயில், வளர்ந்தோர் எழுச்சிக்குயில்** ஆகிய பிரிவுகளில் மிகத்திறமையாகப் பாடி, அதிகூடிய புள்ளிகளைப்பெறும் எழுவர் தெரிவு செய்யப்பெற்று **இரண்டாம் சுற்றுப் போட்டி** நடைபெறும்.
- இரண்டாவது சுற்றின் **எழுவரில் நால்வர் தெரிவுசெய்யப்பெற்று**, எழுச்சிக்குயில் விருதுக்கான **இறுதிப்போட்டி** நடைபெறும்.
  - முதலாவது சுற்றில் தெரிவுசெய்யப்பெறும் எழுவரும் தரப்படும் **12 பாடல்களில் ஒரு பாடலைத் தெரிவுசெய்து முழுமையாகப் பாடுதல் வேண்டும்.**

- இரண்டாம் சுற்றில் தெரிவுசெய்யப்பெறும் **நால்வரும் தரப்படும் 6 பாடல்களில் ஒரு பாடலைத் தெரிவுசெய்து முழுமையாகப் பாடுதல் வேண்டும்.**
- **இப்பாடல்களுக்கான ஒத்திகை பார்க்கப்பட மாட்டாது.**
- **போட்டியின்போது பின்னணி இசையுடன் பாடவேண்டும்.**

- எழுச்சிக்குயில் விருதுக்கான தெரிவுப்பாடல்கள் இத்துடன் இணைக்கப்படுகின்றன. அப்பாடல்களை **எந்தப்பிரிவிலும் முதற்சுற்றுக்கான போட்டிப்பாடலாகத் தெரிவுசெய்ய முடியாது.**
- எழுச்சிக்குயில் 2026 விருதினைப் பெறும் வெற்றியாளருக்குத் தங்க நாணயமும் 2026 ஆம் ஆண்டுக்கான தமிழீழத் தேசிய மாவீரர் நாளில் மாவீரர் நினைவுப் பாடலைப் பாடுவதற்கான வாய்ப்பளிக்கப்படும்.
- ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் மதிப்பளிக்கப்படுவார்கள்.
- போட்டியாளர் தெரிவுசெய்யும் பாடல் எமது அங்கீகாரம் பெற்ற தமிழீழ எழுச்சிப்பாடலாக இருத்தல் வேண்டும்.
- **தெரிவுசெய்யும் மூலப்பாடலின் சுருதியிலே பாடலைப் பாடுவதே சிறப்பாகும். போட்டியாளரின் வசதி கருதி பாடலின் சுருதி குறைக்க நேர்ந்தால் ஒரு கட்டை சுருதிக்கு மேல் குறைக்க முடியாது. போட்டியாளரால் தெரிவுசெய்யும் பாடல் அவருக்கு ஏற்ற பாடலாக இல்லாதிருப்பின் பொருத்தமான பாடலைத் தெரிவுசெய்வதற்குரிய ஆலோசனைகளைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் இசைக்கட்டுப்பாட்டாளர் வழங்குவார்.**
- போட்டியாளர் இறுவெட்டுகளில் பாடிய சொந்தப் பாடலைப் போட்டியில் பாடமுடியாது.
- போட்டிக்கு விண்ணப்பித்த போட்டியாளர் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்படும் நாள்களில் பாடல் ஒத்திகைக்காக வருகைதருதல் வேண்டும்.
- போட்டியாளர் ஒருவர் தெரிவு செய்த பாடலை இன்னொரு போட்டியாளர் **(எந்தப் பிரிவிலும்)** தெரிவுசெய்ய முடியாது.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- **போட்டிக்கான விண்ணப்பம், வதிவிட அனுமதிப் பத்திரத்தின் பிரதி, போட்டியாளரின் நிழற்படம், தெரிவு செய்த பாடலின் எழுத்து வடிவம் மற்றும் ஒலி**(Mp3) **வடிவம் ஆகியவற்றை இணையதளத்தின் ஊடாக அனுப்புவதன் மூலம் போட்டியாளராக இணைந்துகொள்ளலாம்.**

- **பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**
- **அனுமதிக்கட்டணம் செலுத்திய பின்னரே உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**
- இணை எழுச்சிக்குயிலுக்கான பாடல் இருவர் இணைந்து பாடிய பாடலாக இருக்க வேண்டும்.
- **இரண்டு நாள்களும் போட்டிகள் குறித்த நேரத்தில் தொடங்கப்படும்.**

**வயதெல்லை:**

- காந்தள் எழுச்சிக்குயில் (01.01.2017 – 31.12.2019 வரையில் பிறந்தோர்)
- செண்பகம் எழுச்சிக்குயில் (01.01.2014 – 31.12.2016 வரையில் பிறந்தோர்)
- வாகை எழுச்சிக்குயில் (01.01.2011 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)
- சிறுத்தை எழுச்சிக்குயில் (01.01.2007 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)
- வளர்ந்தோர் எழுச்சிக்குயில் (31.12.2006 இற்கு முன் பிறந்தவர்கள்)
- இணை எழுச்சிக்குயில் (இரு குரல் - வயதெல்லை இல்லை)

**விண்ணப்ப முடிவு நாள் : 11.04.2026 சனிக்கிழமை**

**போட்டி நடைபெறும் நாள்கள்: 23, 24 மே 2026 சனி, ஞாயிறு**

**விண்ணப்பக்கட்டணம் : தனிப்பாடல் 60CHF**

**இணை எழுச்சிக்குயில் ஒருவருக்கு 40CHF**

**போட்டி நடைபெறவுள்ள முகவரி:** Salzhaus
Weihergasse 10
3380 Wangen An der Aare


**விண்ணப்பக்கட்டணம் செலுத்தவேண்டிய தபாற்கணக்கு:**
60-34553-3 TRF Swiss, 4528 Zuchwil.

**மின்னஞ்சல்**: trfswiss@gmail.com

**விண்ணப்பம்:** www.trfswiss.com

**முகநூல்**: www. facebook.com/ezhuchchikuyil

**தொடர்புகளுக்கு: 076 426 27 80, 078 880 73 19**




# Twint : 076 426 27 80

**குறிப்பு :-**

**Twint ல் பணத்தைச் செலுத்தும் போது போட்டியாளரின் முழுப்பெயரைக் குறிப்பிடவும் அல்லது திரைநிலைப்படம் (screenshot) எடுத்து மேற்குறிப்பிட்ட பணம் செலுத்தப்பட்ட இலக்கத்திற்கே அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்க.**